# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| அ.வ.எண். | 288/2013 | சாட்சி | பி.வா.சா.2 |
|---|---|---|---|
| பெயர் | தனபால் | நாள் | 25.11.2024 |
| தகப்பனார் பெயர் | மாதையன் | | |

**வாதிகள் தரப்பில் பி.வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

11) ச.எண்.65/10ல் என் பாட்டி வாதிகளின் முன்னோர்களிடமிருந்து எவ்வளவு விஸ்தீரணமுள்ள நிலத்தை கிரயம் பெற்றதாக நான் சொல்கிறேன் என்றால், பத்திரப்படி என் பாட்டி 46 சென்ட் நிலத்தை கிரயம் பெற்றுள்ளார். பரிமாற்றப்படி என் பாட்டி மேலும் ஒரு 46 சென்ட் நிலத்தை வாதிகளின் முன்னோர்களிடமிருந்து பெற்றுள்ளார். நான் சொல்வது தவறானது என்றாலும், அசையா சொத்தை பொறுத்து பதிவு செய்யப்படாமல் அவ்வாறு பரிமாற்றம் செய்யவே இயலாது என்றாலும், சரியல்ல.

12) யார் யாருக்கிடையே மேற்படி சொத்து பரிமாற்றம் நடைபெற்றதாக நான் சொல்கிறேன் என்றால், என் பாட்டி சின்னம்மாளும், வாதி வெங்கடாஜலத்தின் பாட்டனார் கந்தப்ப கவுண்டரும், மேற்படி கந்தப்ப கவுண்டரின் மனைவி பழனியம்மாளும், மற்றொரு மாரிமுத்து கவுண்டரும் மேற்படி பரிமாற்றம் செய்து கொண்டனர். மேற்படி பரிமாற்றம் செய்துகொண்டதாக நான் சொல்லும் சங்கதிகள் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால், என் பாட்டனார், என் தந்தையிடம் கூறியதன் பேரில், என் தந்தை என்னிடம் கூறியதன் அடிப்படையில் நான் தெரிந்து கொண்டேன். நேரடியாக எனக்கு தெரியாது என்றால், சரிதான்.

13) அவ்வாறு பரிமாற்றம் செய்து கொண்டது தொடர்பாக மேற்படி நபர்கள் ஏதேனும் எழுத்து பூர்வமான ஆவணங்களை ஏற்படுத்தி கொண்டனரா என்றால், அவ்வாறு பத்திரம் எதுவும் எழுதவில்லை. ஆனால், அவ்வாறு பரிமாற்றம் செய்து கொண்டதற்கு பின்னிட்டு மேற்படி பரிமாறிக்கொள்ளப்பட்ட நிலங்கள் தொடர்பாக அந்தந்த தரப்பினர்கள் பெயரில் பட்டா பெற்றுக்கொண்டனர். நான் சொல்வது தவறானது என்றாலும், உண்மையில் அவ்வாறு மேற்படி நபர்கள் தங்களுக்குள் ஏதேனும்

நிலங்களை பரிமாற்றம் செய்துகொண்டிருந்தால் அது தொடர்பாக ஆவணம் எழுதி அதை சட்டப்படி பதிவு செய்திருப்பார்கள் என்றாலும், அவ்வாறு ஆவணங்கள் எதுவும் ஏற்படுத்தப்படாத நிலையில், வாய்மொழியாக பரிமாற்றம் செய்து கொண்டதாக நான் சொல்வது ஏற்கதக்கதல்ல என்றாலும், சரியல்ல.

14) ராமசாமி மற்றும் ஏழுமலை ஆகியோர் என் தந்தையிடம் நிலத்தை அடமானம் வைத்து கடன் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், என் தந்தை சொன்னதன் அடிப்படையில் எனக்கு தெரியும். எந்த சொத்தை அடமானம் வைத்து அவ்வாறு கடன் பெற்றார்கள் என்றால், ச.எண்.65/8, ச.எண்.65/9, ச.எண்.65/10 ஆகிய சர்வே எண்களை அடமானம் வைத்து கடன் பெற்றனர். அதில் ச.எண்.65/10ல் மேற்படி நபர்கள் 9 சென்ட் நிலத்தை மட்டும் தான் அடமானம் வைத்தனர்.

15) எங்கள் எதிர்வாதப்படி ச.எண்.65/10ல் உள்ள நிலம் முழுவதையும் வாதிகளின் முன்னோர்கள் என் பாட்டி சின்னம்மாளிடம் வாய்மொழியாக பரிமாற்றம் செய்து ஒப்படைத்துவிட்டதாக நாங்கள் சொல்லும் நிலையில், எவ்வாறு மேற்படி ச.எண்.65/10ல் வாதிகள் 9 சென்ட் நிலத்தை என் தந்தையிடம் அடமானம் வைத்ததாக நான் தற்போது சொல்கிறேன் என்றால், என் தந்தை படிப்பறிவற்றவர், மேற்படி வாதிகள் பெயரில் ஏதேனும் பழைய பட்டா இருந்திருந்தால், அதனை பயன்படுத்தி என் தந்தையை ஏமாற்றி மேற்படி அடமானத்தை வைத்துள்ளனர். நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி ச.எண்.65/10ல் உள்ள நிலத்தின் அனுபவமும், உரிமையும் மேற்படி வாதிகளிடம் இருந்ததன் அடிப்படையில்தான் மேற்படி நிலத்தை, என் தந்தை அடமானத்துக்கே பெற்றுள்ளார் என்றாலும், அவ்வாறு சட்டப்படி நடைபெற்றுள்ள ஒரு செயல் குறித்து தற்போது ஏமாற்றி பெற்றுள்ளதாக கூறுவது ஏற்புடையதல்ல என்றாலும், சரியல்ல.

16) ச.எண்.65/10ல் உள்ள நிலத்தை வாதிகள் நாளது தேதி வரை தங்களது சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகின்றனர் என்றாலும், மேற்படி நிலத்தை பொறுத்து எங்களுக்கு எவ்வித உரிமையோ, அனுபவமோ இல்லை என்றாலும்,

சரியல்ல. எந்த சர்வே எண்ணில் உள்ள நிலத்தை அரசாங்கம் அணை கட்டுவதற்காக கையகப்படுத்தியதால், அதற்று நஷ்டஈடாக என் சகோதரருக்கு வேலை வழங்கப்பட்டது என்றால், ச.எண்.65/11A, ச.எண்.65/10C1 ஆகியவற்றில் உள்ள நிலங்கள் கையகப்படுத்தப்பட்டதற்கு ஈடாக வேலை வழங்கப்பட்டது. எங்கள் எதிர்வாதப்படி ச.எண்.65/10 ல் உள்ள 92 சென்ட் நிலமும், எங்களது சுவாதீனத்தில் உள்ளதாக கூறும் நிலையில், எதனால் மேற்படி சர்வே எண்கள் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால், ச.எண்.65/10A ல் கூட்டுக்கிணறு உள்ளது. ச.எண்.65/10C என் தந்தையில் அனுபவத்தில் உள்ளது. மேற்படி ச.எண்.65/10C1 கையகப்படுத்தப்பட்டுள்ளது. அதனால்தான் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

17) அரசாங்கத்தினர் மேற்படி நிலம் கையகப்படுத்தப்பட்ட சமயத்தில் அவர்களாகவே உட்பிரிவு செய்து கொண்டனர். நான் சொல்வது தவறானது என்றாலும், அரசாங்கம் அவ்வாறு ஒருபோதும் தன்னிச்சையாக உட்பிரிவு செய்யாது என்றாலும், அரசாங்கத்தை ஏமாற்றி வேலை பெறவேண்டும் என்ற நோக்கில் நாங்களே விண்ணப்பித்து அவ்வாறு உட்பிரிவு செய்துள்ளோம் என்றாலும், சரியல்ல.

வாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.2 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஓம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.